செ.வெ.எண்: 554 நாள்: 05.07.2010

பத்திரிக்கைச் செய்தி

இன்று 05.7.2010 பிற்பகல் 1.30 மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள், சென்னை, செனடாப் சாலையில் ரூபாய் 2.25 கோடி மதிப்பீட்டில் 12,596 சதுரடியில் கட்டப்பட்டுவரும் புதிய தாட்கோ தலைமை அலுவலக கட்டிட பணிகளை பார்வையிட்டார். இக்கட்டிடம் கட்டுவதற்கு 10.3.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அக்கட்டிடம் தற்போது கதவு மேல் மட்டம் வரை ( Lintel Stage) கட்டப்பட்டுள்ளது. கட்டிடப் பணியினை விரைவுபடுத்துமாறு அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கட்டிட பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் பார்வைவயிட்டபோது ஆதிதிராவிடர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ.சிவசங்கரன்,இ.ஆ.ப., மற்றும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சந்திரகாந்த் பி.காம்ப்ளே,இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

5/7/10

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.